**கைத்தொழிற்களுக்கான தகவல் பத்திரம்**

1. **I2I என்றால் என்ன?**

   I2I என்பது 2018 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட முன்மொழிவாகும். இதன் நோக்கம் புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு அவர்களின் புதிய கருத்துக்களை வணிகமயப்படுத்த மற்றும் அந்த வணிக மயப்படுத்தல் மூலம் குறித்த கம்பனிக்கு நண்மைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில், புதிய கண்டுபிடிப்பாளர்களை பொருத்தமானகைத் தொழிற்துறைகளுக்கு உட்பிரவேசிக்கச் செய்தல்.

2. **கைத்தொழிற்களுக்காக பங்குபற்றுவது எவ்வாறு?**

   நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் கீழ்க் காணும் துறையில் ஈடுபடும் அல்லது அந்த துறைகளில் பல் வகைத் தன்மையைக் கொண்டுவரவிருப்பம் தெரிவிக்கும் கைத்தொழிற்களில் இருந்து முன்மொழிவுகள் கோரப்படுகின்றது?

   - உணவுமற்றும் விவசாயம்
   - எரிசக்தி
   - சுகாதாரம்
   - தண்ணீர்,கழிவுப்பொருட்கள் மற்றும் சுற்றாடல்
   - தகவல் தொழிநுட்பம், இலத்திரனவியல் மற்றும் நிதிதொழிநுட்பம்

   இதற்காக தங்களின் விருப்பம் பற்றிய கூற்று 2018 ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி இரவு 12.00. மணிக்கு i2i@mo.tresury.gov.lk மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்

3. **ஏதேனும் கம்பனிகளுக்கும் இதற்காக விண்ணப்பிக்க முடியுமா?**

   முடியும். இலங்கையினுள் கூட்டிணைக்கப்படாத புதிய தொழிநுட்பம் அல்லது செயல்முறைகளை பயன்படுத்திக் கொண்டு தமது உற்பத்தியை அல்லது சேவைலயை அபிவிருத்திசெய்வதற்கு விருப்பம் தெரிவிக்கும் கம்பனி ஒன்றுக்கு இதற்காக விண்ணப்பிக்கலாம். புதிய கண்டுபிடிப்பாளருக்கு வேலை செய்வதற்கு தேவையான சூழலை வழங்குவதற்கான இயலுமை கம்பனிக்கு இருத்தல் வேண்டும். அந்தக் கம்பனிகள் கீழ்க் காணும் துறைகளில் ஏற்கனவே ஈடுபட்டு அல்லது ஈடுபடுவதற்கு உத்தேசிக்கும் கம்பனி ஒன்றாக இருத்தல் வேண்டும்.

   - உணவுமற்றும் விவசாயம்
   - எரிசக்தி
   - சுகாதாரம்
   - தண்ணீர்,கழிவுப்பொருட்கள் மற்றும் சுற்றாடல்

- தகவல் தொழிநுட்பம், இலத்திரனவியல் மற்றும் நிதிதொழிநுட்பம்

இத்திட்டம் 24 மாதங்கள் அமுலில் இருக்கும் வகையில் புதிய கண்டுபிடிப்பாளர் சேவையில் ஈடுபடுத்தப்படுவது எந்த இடத்தில் என்பது பற்றி அரசாங்கம் மற்றும் புதிய கண்டுபிடிப்பாளருடன் குறித்த கம்பனி மூன்று தரப்பு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவேண்டும். விளைத்திறனான உற்பத்தி, புதிய கண்டுபிடிப்பாளரின் மற்றும் கம்பனியின் விருப்பத்திற்கமைய பங்குதா ரகம்பனிக்கு பிரயோசனத்திற்காக எடுத்துக்கொள்ளலாம்.

4. **ஆரசாங்கம் மற்றும் குறித்த கம்பனிக்கு ஒத்துழிப்பு வழங்குவதுஎப்படி?**

24 மாதங்களுக்காக புதிய கண்டுபிடிப்பாளரின் மாதாந்த மொத்த சம்பளத்தில் 50 வீத உச்ச தொகை ரூபா 50,000.00 வரை மீளளிப்புச் செய்வதற்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கும். இலங்கையினுள் குறித்த உற்பத்தியின் உரிமையை பெற்றக்கொள்வதற்கும் ஏனைய தொடர்புடைய செலவுகளை அரசாங்கம் ஏற்கும்.

5. **இது கம்பனிக்கு எவ்வாறான நன்மைகளை பெற்றுக்கொடுக்கும்.?**

கம்பனி தனது உற்பத்தி திறனை மேம்படுத்துவதற்கு தனது உற்பத்திகளை பரப்புவதற்கும் வாடிக்கையாளர்களை முதன்மைப்படுத்தி இந்த புதிய கண்டுபிடிப்பாளர், புதிய கருத்துக்களை கம்பனிக்குள் கொண்டுவருவர்.

மேலதிக விபரங்கள் தேவைப்படும் பட்சத்தில், உங்களுடைய பிரச்சினைகளை i2i@mo.tresury.gov.lk மின்னஞ்சலுக்குஅனுப்பவும். அல்லது தொலைபேசி இல. 011-2484842 என்ற இலக்கத்திற்கோ அல்லது 011-2151493 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கெள்ளவும்.